தவணைக் கடன் மூலம் படகு விநியோகம்

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

மலர் 10

தபால்பெட்டி எண்: 49 இதழ் 191

போன் 289 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலக ஆவணி 4 ஜ: அவ் 25 செவ்வாய்க்கிழமை (20-8-68)

மீனவருக்கு உதவி

யாழ்ப்பாணம், செவ். கடற்றொழில் பகுதியில் பணம்செலுத்தும் வகையில் படகுகொள்வனவு செய்வதற்கான வசதித் திட்டமொன்று கூடியவிரைவில் நடைமுறைக்கு வரவிருக்கின்றது. இத்திட்டத்தின் கீழ் மூன்றரை தொன் இயந்திரப்படகுகள் மீனவர்களுக்கு வழங்கப்படும்.

இலங்கையின் கொழும்பு வடமேற்கு, வடதெற்கு, மேற்கு, தென்மேற்கு, தென்கிழக்கு, வடமாகாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் இத்திட்டத்தின் கீழ் இயந்திரப்படகுகளைப் பெற வாய்ப்புக்கிடைக்கும். இதற்கான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் வடமாகாணத்துக்கான தெரிவு இன்னும் நடைபெறவில்லை.

தவணைமுறையில்வழங்கப்படவிருக்கும் இயந்திரப்படகுக்கான சிட்டங்கள்முழுவதும் கடற்றொழில் அதிபரின் பரிசீலனையின் பின்னரே நடைமுறைக்கு வரும் என பது குறிப்பிடத்தக்கதாகும். [கா. தி.]

வாழ்க்கை செலவை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்

ஆட்சிமன்றத்தில் ராஜாங்க அமைச்சர்

4 வகை துணிகள் விலை குறையும்

பம்பலப்பிட்டி, திங்கள்

துணிகளின் விலைகள் குறையுமென்றும், கூடுமானவரை வாழ்க்கைச் செலவைக் குறைக்க அரசாங்கம் ஏற்ற நடவடிக்கை எடுக்குமென்றும் ஆட்சிமன்றத்தில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா இன்று தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்தின் 2வது வாசிப்பின் மீதான விவாதத்தின்போது ராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நான்கு பிரயல்யமான துணிகளின் விலைகள் இனிப் பழைய விலைகளுக்கே விற்கப்படுமென்று அவர் குறிப்பிட்டார்.

இந்தத் துணிகள் சலுசலவினால் பழைய விலைக்கே விற்கப்படும். சீத்தை, வெள்ளைப் பப்ளின், சாயப் பப்ளின், லோங்குளோத் ஆகியன இவற்றில் அடங்குமென்று அமைச்சர் எடுத்துக் கூறினார்.

வாழ்க்கைச் செலவைக் குறைக்க அரசாங்கம் ஏற்ற நடவடிக்கை எடுக்குமென்றும், கல்வி, சுகாதாரம், சமூக சேவை ஆகியவற்றுக்கான செலவுகள் உயர்ந்து கொண்டுபோனாலும் உப உணவு இறக்குமதிக்கு 62 கோடியே 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிக்கும் இடம்

உல்லாசப் பிரயாணத்தினால் முன்னையைவிட இலங்கை இப்போது அதிக வருமானம் பெற்றுவருகிறதென்றும் இதுசம்பந்தமாக மேலும் ஆராய்வதற்காக நியமிக்கப்படவிருக்கும் தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சியினருக்கும் இடம் அளிக்கப்படுமென்றும் கூறினார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த அகலவத்தை எம். பி. டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசுகையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எதுவும் செயல்படுவதில்லையென்றும் அமைச்சரவை உலகவங்கியின் சொற்படியே நடந்துகொள்கிறதென்றும் குறைதெரிவித்தார். நிர்வாக முறையில் மாற்றம் தேவை என்றும் குறிப்பிட்டார்.

கொழும்புமத்திய தொகுதி எம். பி, திரு. பீட்டர் கெனமன் பேசுகையில் ரூபாய் மதிப்புக் குறைப்பு ஏற்றுமதி வர்த்தகத்துக்கு ஊக்கம் அளிக்கவில்லையென்றார்.

நீதியரசர் கிரெட்சர் முன்னிலையில் விசாரணைகள்

வவுனியா பலாத்கார வழக்கு செப்டம்பர் 2-ல் எடுக்கப்படும்

யாழ்ப்பாணம், செவ். வடபகுதி அசைஸ்கோர்ட்டு நீதியரசராக கடமையாற்றிய நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம் சதிவழக்கு விசாரணையில் நீதியரசராகக் கடமையாற்றச் செல்கிறார். இம்மாதம் 27-ந்திகதி முதல் வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில், விசாரணைகள் நீதியரசர் ஓ. எஸ். டி. கிரெட்சர் முன்னிலையில் நடைபெறும்.

இம்மாதம் 25-ந் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த வவுனியா கற்பழிப்பு வழக்கு, அடுத்தமாதம் 2-ந் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

வவுனியா பார்வதி கற்பழிப்பு வழக்கின் எதிரியான சப் இன்ஸ்பெக்டர்பெரேராக்கவினமுற்றதினால், நீதிமன்றத்திற்குஆஜராகவில்லையென வைத்திய அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆலயப் பிரவேசம்

அட்டோர்ணி ஜெனரலுடன் மீண்டும் ஆலோசனை

வடபகுதி பொலிஸ் அதிபர் கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம், செவ். ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக பொலிசாரின் அடுத்த நடவடிக்கை என்னஎன்பதுபற்றி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இன்றுகாலை அட்டர்ணி ஜெனரலுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

ஆலயப் பிரவேசத்துக்கு சகலருக்கும் சட்டம் இடம் அளிக்கின்றபோதும், மூடப்படும் ஆலயக்கதவுகளை திறந்துவிடும் அதிகாரம் பொலிசாருக்கு உண்டா என்பதுபற்றி இப்போது பேச்சுவார்த்தையில் கூடுதலாக ஆராயப்படும் என்று தெரிகின்றது.

மாவிட்டபுரம் ஆலயப்பிரவேச வழக்குகள், உரும்பராய் கற்பகப்பிள்ளையார் கோவில் ஆலயப் பிரவேச தடுப்புவழக்குகள் சம்பந்தமாக பொலிஸாரின் நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டுமென்பதுபற்றி இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஆராயப்படலாம் என்று தெரிகின்றது. (கா. தி.)

சிங்கப்பூர்

சபாநாயகர் இலங்கையில்

பம்பலப்பிட்டி, திங்கள் சிங்கப்பூர் பாராளுமன்ற மக்கள் பிரதிநிதிகள் சபை சபாநாயகர் திரு. பி. குமாரசுவாமி பேரு நாட்டைச் சேர்ந்த லீமா என்னுமிடத்தில் நடைபெறும் பாராளுமன்ற உறுப்பினர்களது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக விமானமார்க்கமாக செல்லும் வழியில் கட்டுநாயகா விமான நிலையத்தில் வந்து இறங்கினார்.

இலங்கை அரசாங்கச் சாபில் செனட்டர் வேணன் திசநாயகாவும், திரு. ஆர். நமசிவாயம் ஆகியோர் வரவேற்றனர். சபாநாயகர் திரு. குமாரசுவாமி இன்று தமது பயணத்தை மீண்டும் ஆரம்பித்தார்.

வடக்கு, கிழக்கில்

வெங்காய உற்பத்தியாளர் அனுபவிக்கும் கஷ்டம்

பிரதிநிதிகள் சபையில் தொண்டமான் பிரஸ்தாபம்

கொழும்பு, திங்கள் வரவு-செலவுத் திட்டத்தின் மீது நியமன எம். பி. திரு. எஸ். தொண்டமான் நேற்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் பேசியபோது வடக்கு கிழக்கு மாகாணங்களில் வெங்காயம் பயிரிட விவசாயிகளுக்கு இருந்து வரும் கஷ்டங்கள்பற்றி குறிப்பிட்டார்.

வெங்காயத்துக்கு நியாயமான விலை நிர்ணயம் செய்யும்படியும் அப்படி இல்லையென்றால் வெங்காயத்துக்கு விலைநிர்ணயமே வேண்டாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்று வெங்காயம் கொழும்பில் ஒரு அந்தர் 22 ரூபாயிலிருந்து 24 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. ஆனால்உற்பத்தியாளர்கள் இந்த விலையில் மிகச் சிறு அளவே பெறுகிறார்கள் என்று திரு. தொண்டமான் குறிப்பிட்டார். உள்நாட்டில்உற்பத்தியாகும் பொருட்களுக்கு விலை மிகச் சிறிதளவு நிர்ணயிப்பதற்கான சட்டம் இயற்றவேண்டும். அப்பொழுதுதான் பாவனையாளர்களும் சுரண்டப்படமாட்டார்கள் என்று திரு. தொண்டமான் வற்புறுத்தினார்.

குழந்தைக்கு பொலிஸ் பாராட்டு

யாழ்ப்பாணம், செவ். பெண்கள் அணியும் இரு கைக்கடிகாரங்களை சிறு குழந்தையொன்று நிலத்திலிருந்து கண்டெத்துப் பொலிசாரிடம் ஒப்படைத்தது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் 18-ம்திருவிழா வன்று தேடுவாரற்று நிலத்தில் கிடந்த இரு கைக்கடிகாரத்தையும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த இக்குழந்தையின் நேர்மையைப் பொலிஸ் அதிபர் பாராட்டினார். [கா. தி.]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாற்ருர் தலையீட்டுக்கு வழிவகுக்கவேண்டாம்

இந்து மக்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ். அந்நியர் ஆட்சிக்காலத்தில் பல ஹரிஜன மக்கள் தங்கள் குறைகளைத் தீர்ப்பதற்கு அந்நிய அரசாங்கத்தின் ஆதரவைப் பெறும் பொருட்டு அந்நிய மதத்தைத் தழுவினர். மறுபடியும் அப்படி ஒரு நிலை ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஆலயப் பிரவேச செயற்குழுவின் தலைவரும், செயலாளர்களும் பொருளாளர்களும் உறுப்பினர்களும் கூட்டாகவிடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் ஹரிஜன ஆலயப் பிரவேசம் ஒரு முடிந்த காரியமாய்விட்டது. அங்குள்ள பாடல்பெற்ற தலங்களும் சரித்திரப் பிரசித்தி பெற்ற தலங்களும் உட்பட எல்லா ஆலயங்களும் ஹரிஜனங்களுக்குத் திறக்கப்பட்டுவிட்டன. சைவமக்களால் கோயில் எனப் போற்றப்படும் சிதம்பரம் நடராஜப் பெருமான் கோயிலும், மதுரை மீனாட்சியம்மன் கோயிலும், திருச்செந்தூர் முருகன் கோயிலும் இவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

இலங்கையிலும் பாடல் பெற்ற தலங்களான திருக்கேதீச்சரத்திலும், கோணேஸ்வரத்திலும், சரித்திரப் பிரசித்திபெற்ற முனீஸ்வரத்திலும் சகல இந்துக்களும் சாதி வேறுபாடின்றி வழிபட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலும் நல்லூர் கந்தசாமி கோயில், வண்ணார்பண்ணைச் சிவன் கோவில், சுதுமலை அம்மன் கோயில், இணுவில் கந்தசாமி கோயில், வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமான் கோயில், நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில், கைலாய பிள்ளையார் கோயில் உட்பட பல கோயில்கள் திறந்துவிடப்பட்டுவிட்டன.

இதனால் இக்கோயில்களின் சானித்தியமோ அல்லது வழிபடும் மக்கள் தொகையோ பாதிக்கப்படவில்லை.

ஆகையால் இனிச் சமயத்தின் பெயரிலோ அல்லது சட்டத்தின் பேரிலோ ஆலயப் பிரவேசத்தைத் தடுக்க முயல்வது சாத்தியமானதல்ல.

மேலும் சர்வஜன வாக்குரிமை, இலவசக்கல்வி என்பவற்றின் பெறுபேறாக ஹரிஜன மக்கள் தங்கள் உரிமைகளை நன்குணர்ந்து விட்டனர். இறைவன் சன்னிதானத்திலும் சட்டத்தின் முன்பும் சகலரும் சமம் என்னும் உண்மையை அவர்கள் நன்குணர்ந்துவிட்டனர் இனி அவர்களின் முன்னேற்றத்தைத் தடுக்க முயல்வது சாத்தியமாகாது ஆனையால் உயர்சாதி இந்துக்களை நமது சமயத்தின் உயர்ந்த இலட்சியமான அன்பு வழியை சகல சீவராசிகளிடத்தும் காட்டவேண்டிய அன்பு வழியைப்பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இன்னும் இவ்விஷயத்தில் தாமதம் ஏற்பட்டால் இந்து சமூகத்துக்குப் பேராபத்தாகும். அந்நியர் ஆட்சிக்காலத்தில் பல ஹரிஜன மக்கள் தங்கள் குறைகளைத் தீர்ப்பதற்கு அந்நிய அரசாங்கத்தின் ஆதரவைப் பெறும் பொருட்டு அந்நிய மதத்தைத் தழுவினர். மறுபடியும் அப்படி ஒரு நிலை ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

இந்துக்கள் இப்பிரச்னையைத் தாமே தீர்த்துக்கொள்ளாவிட்டால் வெளியார் இவ்விஷயத்தில் தலையிடுவதற்கு வழிவகுத்தவராவர். இப்படி ஒரு தலையீடு சமீபத்தில் மாவிட்டபுரத்தில் நடைபெற்றதை நாம் அறிவோம்.

யாழ்ப்பாணக் கச்சேரியில் 31-7-68-ல் நடைபெற்ற மாநாட்டில்சமுகங்கொடுத்திருந்த இந்துக்கள் இது ஓர் இந்துசமயப் பிரச்னையென்றும் இதைத் தாமே தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் நிச்சயித்து ஒரு செயற்குழுவை நிறுவியதோடு பின்வரும் தீர்மானங்களையும் நிறைவேற்றினர்.

1. யாழ்ப்பாணத்திற் எல்லாப்பகுதிகளிலும்தீவிரமாக ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக பிரசாரம் செய்வது ஹரிஜனங்களை இந்த ஆலயங்களுக்குள் வணங்கச் செல்லவிடாது தடுப்பதனாலும் அதன் தாமதத்தினாலும் ஏற்படும் பெறுபேறுகளைப் பொதுமக்களுக்குவிளக்குவது.

2. ஆலய முகாமையாளர்களையும் குருமார்களையும் அணுகி ஹரிஜனங்களின் நியாயமான கோரிக்கையைத் தெளிவுபடுத்தி முறையாக ஆலயப் பிரவேசம் செய்ய அனுமதிக்குமாறு வேண்டுவது.

3. இவ்வாலயப்பிரவேசப் பிரச்னையில் தாமதம், தேவையற்றவர்களின் தலையீட்டுக்கும் வெளியாரின் குறுக்கீடுகளுக்கும் வழிவகுக்குமென்பதை மனத்திற்கொண்டு இந்து சமய பக்தர்கள் முன்னின்று வழிகாட்டி அமைதி [illegible] குழப்பமுமின்றி வழிபாட்டை விரும்பும் [illegible] ஹரிஜனங்களை ஆலயங்களுக்குள் அழைத்துச் செல்வது.

நாம் இப்பொழுது எடுக்கும் முயற்சி பயனளிக்காவிட்டால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை நினைக்கப் பயங்கரமாயிருக்கிறது. ஆகவே சகல இந்துக்களையும் சிறப்பாக ஆலயத் தர்மகர்த்தாக்களையும் முகாமையாளர்களையும் இந்தச் சபையோடு இஷ்டமான பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒத்துழைக்குமாறு மிகப் பணிவுடன் வேண்டுகின்றோம்.

ஆண்டவன் முன் அனைவரும் சமம்

கொழும்பு, திங்கள் "ஆண்டவன் முன் யாவரும் சமம் என்பதில் சைவர்களிடையே எவ்வித கருத்து வேறுபாடும் கிடையாது. எனவே கிறவாமை மக்கள் யாவரும் சைவாசாரசீலராக ஆலயத்துட் சென்று, ஆண்டவனை வழிபடுவதற்கு ஆலயங்கள் யாவும் திறந்துவிடப்பட வேண்டியது அவசியம் இதுவரையும் திறந்துவிடப்படாதிருக்கும் ஆலயங்கள் யாவற்றையும் திறந்துவிடும்படி ஆலய தர்மகர்த்தாக்களையும், பரிபாலனர்களையும் இந்துவாலிபர் சங்கம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றது. சைவசமயத்தவர்களால் தீர்த்து வைக்கப்படவேண்டிய இப்பிரச்னைகளுக்குத் தெய்வ நம்பிக்கையற்றவர்களாலும் புரட்சி வாதிகளாலும் சைவசமயிகளல்லாதவர்களாலும் தீர்வு காண முடியாதென்று திடமாகக் கருதுகின்றோம். சைவசமயத்துக்கு மாசு கற்பிக்கும் இவர்களது போக்கை இந்து வாலிபர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. இவர்களது தலையீடு நிலைமையை மோசமாக்குமென இந்து வாலிபர் சங்கம் எச்சரிக்கை செய்கின்றது" என்ற மேற்படி தீர்மானம் இந்துவாலிபர் சங்கப் பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

'வைக்கிங்ஸ்' புதிய தலைவர்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் 'வைக்கிங்ஸ்' விளையாட்டுக் கழகத்தின் தலைவர் திரு. சி. குமார் மேல்நாடு செல்வதையொட்டி, புதிய தலைவர் தெரிவுக்காக நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. பி.கிறிஸ்தோத்திரம் 68-ம், 69-ம் ஆண்டு புதிய தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

மேல் நாடு செல்லும் பழைய தலைவர் திரு. சி. குமாருக்கு கழக அங்கத்தினரால் ஓர் பிரிவுபசாரக் கூட்டமும் நடாத்தப்பட்டது. (தே. நி)

படகு இல்லாத துறை

திருக்கோணமலை, திங்கள் திருக்கோணமலை துறைமுகப் பொலிசாரின் பாவனைக்கு இயந்திரப்படகுகள் இல்லாமலிருப்பதால் இங்கு நடைபெறும் கள்ளக்கடத்தல்களைத் தடுப்பதற்குக் கஷ்டமாகவிருப்பதாகக் கூறப்படுகின்றது. துறைமுகத்துக்கு வரும் கப்பல்களிலிருந்துகூட பொருட்கள் கடத்தப்படுவதாகச் சொல்லப்படுகின்றது.

மணிவாக்கு

தளராத உள்ளமும், சத்தியமே வெற்றி தரும் என்ற நம்பிக்கையுள்ளவர்களை எந்த நிலையும் அணுக மாட்டாது.

— சுபாஷ்சந்திரபோஸ்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna.
Post Box: 49 Jaffna
Telephone 389.

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை ஆவணி மாதம் 4-ந் திகதி (20-8-68)

இந்திய வம்சாவளியினர்

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின்படி இந்தியா திரும்பும் தோட்டத் தொழிலாளர்கள் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டத்தின் கீழ் தாம் எடுத்துச் செல்லும் பணத்துக்கு 45 சதவீத வெளிநாட்டுச் செலாவணி வரி செலுத்தவேண்டியிருக்கும் நிலையை ஏற்றுக்கொள்ள முடியாதென்று நியமன எம். பியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு. எஸ். தொண்டமான் ஆட்சேபணத்தில் எடுத்துக்காட்டியிருப்பது ஆட்சியாளரின் கவனத்தை ஈர்க்கவேண்டும்.

இரு நாடுகளுக்குமிடையில் இந்திய வம்சாவளியினர் சம்பந்தமான பிரச்னை நீடிக்கக்கூடாதென்றும் இதனால் இரு நாடுகளுக்குமிடையில் நல்லுறவு கெட்டுவிடுமென்றும் அப்படியான ஒரு நிலை ஏற்படாமல் தடுக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்துடனேயே இரு நாடுகளும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டன என்பது தெளிவு. எந்த நல்லுணர்வுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதோ அதே உணர்வுடன் அதை அமுல் நடத்துவதுதான் நியாயம். அப்பொழுதுதான் ஒப்பந்தமும் சரியான முறையில் அமுலாக முடியும். இலங்கை—இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின்னர் இருபத்தி மூவாயிரத்துக்கு மேற்பட்ட இந்திய வம்சாவளியினருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கி இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் அறிவித்திருக்கிறது. எத்தனை பேருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளதென்பதை இந்திய தூதரகம் மாதா மாதம் அறிவித்து வருகிறது. அதாவது இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை இந்திய அரசாங்கம் அமுல்நடத்தத் தொடங்கிவிட்டதென்பதை இந்திய தூதரகம் செயலில் காட்டிவருகிறது. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த ஒப்பந்தத்தை அமுல்நடத்தத் தொடங்கியிருப்பதாக எதையும் செயலில் காட்டும் நிலையில் இல்லை. ஒப்பந்தம் கைச்சாத்தானபின்னர் எத்தனை இந்திய வம்சாவளியினருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டிருக்கிறது? ஒப்பந்தத்தின்படி ஐந்தேகால் லட்சம் இந்திய வம்சாவளியினர் இந்தியப் பிரஜைகளாகி இந்தியா திரும்பவேண்டும். மூன்றரை இலட்சம் இந்திய வம்சாவளியினருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கி இலங்கையராக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவரை இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளதேயொழிய இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படவில்லை.

இது ஒருபுறமிருக்க இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்து இந்தியா திரும்புவதற்கு இந்தியவம்சாவளியினரை இலங்கை அரசாங்கம் கட்டாயப்படுத்தக் கூடாது என்பது இருநாடுகளும் ஒப்புக்கொண்ட கொள்கை. இலங்கை அரசாங்கம் காட்டும் நல்லெண்ணத்திலும் அளிக்கும் தூண்டுதலிலும் தான் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொண்டு இந்தியா செல்ல முன்வருவர். அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் இந்திய வம்சாவளியினர் இங்கிருந்து செல்வதற்கு இடையூறாக இருந்தால் அதனால் அரசாங்கத்துக்குத் தான் நஷ்டமும் கஷ்டமும் ஏற்படுமேயொழிய வேறுயாருக்குமல்ல. வாழ்நாள் முழுக்க இங்கு கஷ்டப்பட்டு உழைத்தவர்களின் உழைப்பை இங்கேயே உறிஞ்சி எடுத்துக் கொள்வது யாருக்கும் நன்மை செய்யாது என்பதையும் அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

நாடும் நடப்பும்

'டெலிபோன்' என்கிற தொலைபேசி சேவை பொது மக்களுக்குக் குறிப்பாக வர்த்தகர்களுக்குப் பெரும் பயன் அளிப்பது. இதனால் தான் 'தொலைபேசி' இணைப்புள்ள வர்த்தக ஸ்தாபனங்களிடம் வருடத்துக்கு 250 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை அரசாங்கம் அறவிடுகிறது. வர்த்தக ஸ்தாபனங்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அரை மணி நேரமல்ல அரைநிமிஷம் கூட ஆயிரம் ரூபாய் லாபம் தேடித்தரும் அல்லது நஷ்டம் ஏற்படுத்தும். இதை தபால் தந்தி இலாகாவுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர் ஒருவருடன் கொழும்பிலுள்ளவர்த்தகர் ஒருவர் உடனடியாக தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றால் அது நடைபெறமுடியாத காரியம்.

கொழும்புக்குத் தொலைபேசித் தொடர்புவேண்டும் என்று ஓர் இலக்கத்தைச் சொன்னால் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து கிடைக்கும் முதல் பதில் 'லைன் அவுட் ஒவ் ஓடர்' என்பது தான். அடுத்த முயற்சி செய்தால் ஆறரை மணி நேரம் தாமதம் என்று பதில் கிடைக்கும். இந்த ஆறரை மணி நேரத்தில் வர்த்தக ஸ்தாபனங்களுக்கு ஆயிரம் ரூபாய்க்குமதிகமாகவே நஷ்டமேற்படும். ஆனாலும் அவர்கள் வருடத்தில் 250 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை தொலைபேசிச் சேவைக்காகக் கட்டணம் செலுத்தித்தானாகவேண்டும். தொலைபேசியில் பேசுபவர்களை நேரில் பார்த்துக் கொண்டே பேசுவதற்கு மேல் நாடுகள் என்ன என்னவோ செய்கின்றன. நமது நாட்டில்....

ஃ ஃ ஃ

தொலைபேசி ஒருபுறமிருக்கட்டும். தந்திச்சேவையைப் பற்றி என்ன சொல்வது. 'அம்மா செத்துப்போனு உடன் வரவும்' என்று தந்தி கொடுத்தால் 'அம்மா வருகிறு சந்திக்கவும்' என்று தந்தி போய்ச் சேருகிறது.

தந்தியாவது உடனடியாகப் போய்ச் சேருகிறதா என்றால் அதுவுமில்லை. தந்தி அனுப்புவதற்கு ஒன்றரை ரூபாய் செலவிட்டால் இரண்டு நாள் கழித்து பத்து சதத்துடன் தந்தி பாசலில் போய்ச் சேருகிறது. பத்துச் சதத்தைக் கழித்துக் கொண்டு மிகுதி ஒரு ரூபாய் நாற்பது சதத்தையும் கொடுத்துத் தொலைத்தாலாவது தவலைபே! அதையும் தந்தி இலாகா செய்ய முன் வருவதாக இல்லை.

'யானைவரும் பின்னேமணியோசை வரும் முன்னே' என்பார்கள். "தந்தி வரும் பின்னே ஆள் வரும்முன்னே" என்று மாற்றியமைத்துக் கொள்வோமா?

ஃ ஃ ஃ

'சுடச் சுடக் கொக்கோ கோப்பி குடியுங்கள்' என்று அன்பாக அழைத்துத் தரும் அன்பர்களை இப்பொழுது நல்லூர் கந்தசாமி கோவிலுக்குச் செல்லும் வழியில் தண்ணீர்ப் பந்தல்களில் தான் காண முடிகிறது. அவர்கள் வாழ்க.

தண்ணீர்ப்பந்தல்களில் தாகசாந்தி மட்டுமல்ல செவிக்கும் புலனுக்கும் சாந்திகிடைக்கிறது. சிலதினங்களுக்குமுன் ஒரு தண்ணீர்ப் பந்தலில் திருப்பூங்குடி ஆறுமுகவேலாயுதகோஷ்டியினர் 'முருகன் பெருமை' பற்றிவில்லுப்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூயஸ் கால்வாய்க்கு மேலே ஐ·அ·கு.-இஸ்ரேல் விமானங்கள்

ஒன்றையொன்று தாக்கி விரட்டியதாக அறிவிப்பு

கெயிரோ, ஆக. 19

சூயஸ் கால்வாய்க்கு வடக்கே, ஐ. அ. கு. வானப் பிராந்தியத்தினுள் பிரவேசித்த இரண்டு இஸ்ரேலிய விமானங்களை, தமது விமான எதிர்ப்பு இயந்திரத் துப்பாக்கிகள் தாக்கி விரட்டியதாக ஐ. அ. கு. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்த இரண்டு இஸ்ரேலிய விமானங்களில் ஒன்றுக்குச் சேதமேற்பட்டிருக்கலாமென்றும் அவை தெரிவித்தன.

இது இப்படியிருக்க டெல் அவிவிலிருந்து கிடைக்கும் செய்திகள், சூயஸ் கால்வாய்க்குக் கிழக்கே, இஸ்ரேல் வானப்பிராந்தியத்தினுள் நுழைந்த ஐ. அ. கு. 'மிக்' விமானங்களை இஸ்ரேலிய விமானங்கள் துரத்தி விரட்டியதாகக் கூறுகின்றன.

விரட்டிய தமது விமானங்கள் தமது தளங்களுக்குப் பாதுகாப்பாக வந்துசேர்ந்து விட்டதாகவும் அவை தெரிவித்துள்ளன. ஆனால், துரத்தப்பட்ட ஐ. அ. கு. விமானங்களின் எண்ணிக்கை தெரிவிக்கப்படவில்லை.

ஜெரூசலத்தில் கலவரம்

ஜெரூசலம், ஆக. 19

ஜெரூசலம் நகரில், நேற்று பயங்கர கலவரம் ஏற்பட்டது. கடந்த இருபது வருடங்களில் நகரம் இவ்வளவு மோசமாக அல்லோலகல்லோலப்பட்டது இல்லை எனப் பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

நகரில் சில வெடிகுண்டு விபத்துக்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஆத்திரமுற்ற இஸ்ரேலிய இளைஞர்கள், நகரிலுள்ள அரபுக் கடைகளைச் சூறையாடியும், தெருவில் சென்றுகொண்டிருந்த அரபுப் பிரஜைகளை அடித்தும் அட்டகாசம் புரிந்தனர்.

இஸ்ரேல் பொலிசாரும், இராணுவத்தினரும் கலவரத்தை அடக்கினர்.

இக்கலவரத்தில், 9 பேர் காயமடைந்தனர். இவர்களில் இருவருக்குப் படுகாயமேற்பட்டது.

ஓர் அரபியரை இஸ்ரேலிய இளைஞர்கோஷ்டி ஒன்று அடித்து இம்சைப்படுத்தியதால், அவரது உயிர் அபாயகரமான நிலையிலுள்ளது.

முப்பது அராபியரும், 20 இஸ்ரேலியரும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர்.

பிரிட்டிஷ்நீர்ப்பரப்பில் ரஷ்ய படகு கைது

லண்டன், ஆக. 19

பிரிட்டிஷ் நீர்ப்பரப்பில் சட்ட விரோதமாக மீன்பிடிப்பில் ஈடுபட்டிருந்த ஒரு ரஷ்யப்படகை பிரிட்டிஷ் கப்பலொன்று நேற்றுக் கைதுசெய்தது.

டை விகொத்லாந்துக் கருகேயுள்ள கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்த ரஷ்யப் படகைப் பிரிட்டிஷ் கப்பலொன்று கண்ணுற்று, அதை நிறுத்துமாறு சைகை காட்டியதும், ரஷ்யப் படகு நிற்காமல் விரைந்து செல்ல முயன்றதாகவும், அதைத் தொடர்ந்த பிரிட்டிஷ் கப்பல், தனது சிப்பந்திகள் ஐவரை ரஷ்யப்படகில் இறக்கிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

நைஜீரிய போர் நிறுத்தம்

மன்னர் சலாஸியின் கோரிக்கை நிராகரிப்பு

அடிஸ் அபாபா, ஆக. 19

நைஜீரிய உள்நாட்டுப் போரில் ஒரு போர் நிறுத்தத்தை ஏற்படுத்துமாறும், பியாவ்ராவுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்ப அனுமதி அளிக்குமாறும் எதியோப்பிய மன்னர் ஹெயிலி சலாஸி விடுத்த கோரிக்கையைச் சமஷ்டி நைஜீரியத் தலைவர் ஜெனரல் கோவன் நிராகரித்துள்ளார்.

இவ்விதம் போர்நிறுத்தம் ஒன்று ஏற்பட்டால், அதனை பியாவ்ரா, சமஷ்டி நைஜீரியா மீதான புதிய தாக்குதலொன்றுக்குப் பயன்படுத்திக்கொள்ளுமென்று அவர் குறிப்பிட்டார்.

லண்டனில் சமஷ்டித்தலைவர்

இதற்கிடையில், அடிஸ் அபாபாப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட சமஷ்டி நைஜீரியத் தூதுகோஷ்டித் தலைவரான எனூக்கு, லண்டன்போய்ச்சேர்ந்துள்ளார்.

சமஷ்டி நைஜீரியாவுக்கான ஆயுத உதவியை பிரிட்டன் அதிகரிக்கவேண்டுமென்று அவர் பிரிட்டிஷ் தலைவர்களிடம் கோருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

9 வயதுச் சிறுமிக்கு 11வயதுச்சிறுவனின் இருதயம்

டெக்ஸாஸ், ஆக. 19

அமெரிக்காவைச் சேர்ந்த டெக்ஸாஸ் மாகாணத்திலுள்ள ஆஸ்பத்திரியில், 11 வயதுச் சிறுவனொருவனின் இருதயம் 9 வயதுச் சிறுமி ஒருத்திக்கு மாற்றிவைக்கப்பட்டுள்ளது. சிறுமி சுகமாகவே இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் ஏற்பட்ட மோசமான காரணமாகவே அந்தப்பதினொரு வயதுச் சிறுவன் இறந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

200 வியட்கொங்கியர் கொல்லப்பட்டனர்

சைகோன், ஆக. 19

தென்வியட்னாம் நகர்கள் மீது வியட்கொங்கியர் நேற்றுவரிசையான பலதாக்குதல்களை நடத்தினர்.

அவர்களை எதிர்த்துப் போராடிய அமெரிக்கத் துருப்புகள், 200 வடவியட்னாமிய, வியட்கொங் துருப்புகளைக் கொன்றதாக அமெரிக்க ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரான்ஸின்

முதலாவது ஜலவாயுக் குண்டு

பாரிஸ், ஆக. 19

பசிபிக் சமுத்திரத்தில், தனது முதலாவது ஜலவாயு குண்டுப் பரிசோதனையை நேற்று நடத்தத் திட்டமிட்டிருந்த பிரான்ஸ், அதை இன்னும் சில நாட்களுக்கு ஒத்திப் போட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கோ. வங்காள ரயில் விபத்து

ஐவர் மரணம்

கல்கத்தா, ஆக. 19

நேற்றுக் கிழக்கு ரயில்வேயில் ஏற்பட்ட ரயில் விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். மற்றும் 6 பேர் காயமுற்றனர். இறந்த 5 பேரில் மூவர் ஸ்தலத்திலேயே மரணமாகினர்.

இவ்விபத்து மேற்கு வங்காளத்தில் நடந்தது. அங்குள்ள ரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்த சரக்கு ரயில் வண்டியொன்றின்மீது பிரயாணிகள் வண்டியொன்று வந்துமோதியதன் விளைவாகவே இந்த விபத்து ஏற்பட்டது.

இறந்தவர்களில், பிரயாணிகள் ரயிலைச் சேர்ந்த டிரைவரும், டிக்கெட் சேகரிக்கும் உத்தியோகத்தர் ஒருவரும் அடங்கியிருந்தனர்.

சர்வதேசக் கமிஷன்

பியேர்ஸன் தலைவர்

ஒட்டவா, ஆக. 19

முன்னாள் கனடாப் பிரதமர் திரு. லெஸ்டர் பியேர்ஸன், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவியளிப்பது பற்றிய சர்வதேச கமிஷனொன்றுக்குத் தலைமை வகிப்பார்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு எவ்வெவ் வகையில் சிறந்த உதவி அளிக்கலாம்என்பதை ஆராயுமுகமாக அண்மையில்தான் இக்கமிஷனை நியமித்துள்ள உலக வங்கித் தலைவரான திரு. மக்னமாராவே, திரு. பியேர்ஸனை இக்கமிஷனுக்குத் தலைவராக இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு. பியேர்ஸன் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளார்.

செக். பற்றி உரை

உடுவில், இணுவில்

கன்னாகம் பட்டினசபை நூல் நிலைய கருத்தரங்கில் இம்மாதம் 22-ம் திகதி மாலை செக்கோஸ்லவாக்கியா விஜயத்தில் திரு. [illegible] இன்னைய [illegible] சொற்பொழிவாற்றுவார்.

மத்தியதரைக்கடலில் ஐ. அ. கு. விமானம் விழுந்தது

40 பேரும் உயிரிழந்தனர்

கெயிரோ, ஆக. 19

மத்தியதரைக்கடலில் நேற்று, ஐக்கிய அரபுக்குடியரசு விமானமொன்று விழுந்து நொறுங்கியதில், அதிலிருந்த 40 பேருமே உயிரிழந்ததாக செய்திகள் கூறுகின்றன.

விமானத்தை தேடும் பணியில் ஈடுபட்ட பிரிட்டிஷ் விமானமொன்று, சைப்பிரஸ் தீவுக்குச் சுமார் 100 மைல் தூரத்தில் 12 சடலங்களையும், விமானத்தின் சிதைவுகளையும் கண்டுபிடித்தது. மீட்புக் கப்பல்கள் விபத்து நடந்த இடத்துக்கு விரைந்து சென்றுகொண்டிருக்கின்றன.

இவ்விமானத்தில் 33 பிரயாணிகளும் 7 சிப்பந்திகளும் பிரயாணம் செய்தனர். இது ரஷ்யாவில் அமைக்கப்பட்ட விமானமாகும்.

இந்தவிமானம், கெயிரோவிலிருந்து டமாஸ்கஸ் போய்க்கொண்டிருந்தது. வழியில், செயித்துறைமுகத்துக்கு 170 மைல் தொலைவிலும், சைப்பிரஸ் தீவிலிருந்து சுமார் 100 மைல் தொலைவிலும், விமானம் விபத்துக்குள்ளானது.

விபத்துப்பற்றி விசாரிக்க ஐ. அ. கு. அரசாங்கம் விசேஷ கமிட்டியொன்றை நியமித்துள்ளது.

ஜப்பான் பஸ் விபத்தில் 100 பேர் பலி

டோக்கியோ, ஆக. 19

ஜப்பானில், இரண்டு பிரயாணிகள் பஸ்கள், நிலச்சரிவொன்றினால் ஆறொன்றினுள் விழுந்ததன் விளைவாக 100 பேர் இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் பெண்களையும், குழந்தைகளையும் சுமந்து சென்றுகொண்டிருந்த இரண்டுபஸ்களிலும் மத்திய ஜப்பானைச்சுற்றிப் பார்க்க வெளப்புறப்பட்ட பிரயாணிகளே இருந்தனர்.

விபத்திலிருந்து தப்பிய ஒருசிலரில், பஸ்டிரைவரும் ஒருவர் அடங்கியிருந்தார்.

இந்திய - பாகிஸ்தான் போர் தவிர்ப்பு ஒப்பந்தம்

அயூப்கான் நிராகரிப்புக்கு ஜெயப்பிரகாஷ் கண்டனம்

மதுரை, ஆக. 19

இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரு போர்தவிர்ப்பு உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டுமென்ற இந்தியாவின் ஆலோசனையைப் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் மூன்றுவது தடவையாக இப்போதும் நிராகரித்துள்ளது வருந்தத்தக்க விஷயமாகும் என்று இந்திய சர்வோதயத்தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண், நேற்று மதுரையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அண்மையில் பாகிஸ்தான் அதிபருக்கு ஏற்பட்டிருந்த ஒரு அனுபவத்தைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், இந்தத்தடவை அவர் போர் தவிர்ப்பு உடன்படிக்கைக்கான ஆலோசனையை நிராகரித்திருப்பது ஆச்சரியமாகவிருப்பதாகத் திரு. ஜெயப்பிரகாஷ்நாராயண் மேலும் கூறினார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்ற கடந்தபோரில் பாகிஸ்தான் தோல்வியடைந்த அனுபவத்திலிருந்து அதிபர் அயூப்கான் படிப்பினை எதையும் கற்றுக்கொள்ளவில்லையென்பதே அவரது நிராகரிப்பு எடுத்துரைக்கும் உண்மையாகுமென்று திரு. நாராயண் கூறினார்.

விழா ஒத்திவைப்பு

அளவெட்டி, நிகள்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் இம்முறை வருடாந்த உற்சவத்தில் எதிர்பாராது ஏற்பட்ட இன்னல்களைப் படுத்து துக்கம் அனுஷ்டிக்கு முகமாக மாவை கம்பன் கலைக் கழகத்தினர் மாவை உற்சவத்தையடுத்து வழமைபோல் நடத்தி வந்த விழாவை ஒரு மாத காலத்துக்கு ஒத்திவைப்பதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி அசைஸ் விசாரணை

செம்பியன்பற்று கொலைவழக்கு விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ். செம்பியன்பற்று கொலை வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதியரசர் இவ்வழக்கை அடுத்தமாதம் 9-ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் செம்பியன்பற்றில் 67-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 20-ந் தேதி சந்தையா பாலசுந்தரம் என்பவர், சந்தையா பசுபதி என்பவரைக் கொலைசெய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் ஜே. ஏ. வி. பாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். முடிக்குரிய தரப்பில், அட்வகேட் எஸ். சிவராசா ஆஜரானார்.

வடபகுதி அசைஸ் விசாரணைகள் மீண்டும் இம்மாதம் 27-ம்தேதி ஆரம்பமாகும்.

பக்தர்கள் மத்தியில் ஐ. ஆர். சி. கைது

யாழ்ப்பாணம், செவ். நான்கு வாரண்டுகளுக்கு பிடிபடாமல் தலைமறைவாய் இருந்து வந்த ஐ. ஆர். சி. ஒருவரை வெகு சாதுரியமாக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்தார். இச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்ற நல்லூர் கைலாச வாகன உற்சவத்தில் நடைபெற்றது.

நான்கு வழக்குகளுக்கு இவர் நீதிமன்றத்துக்குச் சமூகம் கொடுக்காததால் இவர் மீது பகிரங்க வாரண்ட் ஏற்கனவே பிறப்பிக்கப் பட்டிருந்தது.

கோவிலின் மக்கள் கும்பலுக்குள் நின்ற இவரை பொலிஸ் கான்ஸ்டபிள் நடராஜா கைது செய்ய சாதாரண உடையில் சென்று அவரது சேட்டைப் பிடித்த போது, அவர் சேட்டைக் கழற்றிவிட்டு கூட்டத்துள் ஓடியதாகவும், கான்ஸ்டபிள் நடராஜா அவரைத் துரத்திச் சென்றே பிடித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில் தேனீர்க் கடையொன்றில் தோசை சுட்டு பாலகிருஷ்ணன் என்ற மற்றொரு ஐ. ஆர். சி. யைக் கைது செய்த கான்ஸ்டபிள் நடராஜாவே நேற்று முன்தினம் இவரையும் கைது செய்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கைது செய்யப்பட்ட வீரசிங்கம் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். [ஈ. நி]

மும்மொழிகளிலும் சிறந்த பேச்சாளர்

செனன் பொத்தேஜா மரணம்: சி. பி. டி. அனுதாபம்

கொழும்பு, செவ். ''காலஞ் சென்ற செனன் பொத்தேஜா மும்மொழிகளிலும் பேசக்கூடிய சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கியவர். எல்லாச் சமூகத்தினரும் சமரசமாகவாழவேண்டுமென்ற உயர் நோக்கிற்காக உழைத்தவர்''

காலஞ் சென்ற திரு. செனட் பொத்தேஜாவிற்கு அஞ்சலி செலுத்துமுகமாக மக்கள் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின் மீது பேசுகையில் சபை முதல்வர் இவ்வாறு கூறினார்.

திருவாளர்கள் சேர். பொன்னம்பலம் இராமநாதன், ஈ. டபிள்யு பெரேரா, ஈ. ஈ. சொறியா, சேர். மாக்கஸ் பெர்னாந்தோ, சேர் ஹென்றி டீ மெல் ஆகியோர் சட்ட நிரூபண சபையில் அங்கம் வகிக்கும் போது திரு. செனன் பொத்தேஜாவும் அவர்களுடன் நாட்டுக்காக உழைத்தார் என்று சபை முதல்வர் சி. பி. டி. சில்வா கூறினார்.

செனன் பொத்தேஜா குடும்பத்திற்கு அனுதாபத் தீர்மானத்தின் நகல் அனுப்பி வைக்கப்பட்டது. திரு. பொத்தேஜா தமது 97 வது வயதில் காலமானார்.

மாஸ்கோ பயணம்

உரும்பராய், திங்கள் ஸ்தலஸ்தாபன நகர சபை தொழிலாளர் சங்க செயலாளரான திரு. ச. இராசையா சோவியத் கம்யூனிஸ் கட்சியின் அழைப்பை ஏற்று மாஸ்கோ செல்கிறார்.

வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்க நிர்வாகக்காரியதரிசியும், அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை பிரமுகருமான இவர், இலங்கை கம்யூனிஸ் கட்சி வடபிரதேச மத்தியசபை உறுப்பினருமாவர்.

இவர் மூன்று மாதகால சுற்றுப்பிரயாணத்தை மாஸ்கோவில் மேற்கொள்ளுவார்.

மேற்படிப்புக்காக பயணம்

உடுப்பிட்டி, திங்கள் துன்னாலை வடக்கைச் சேர்ந்த இராமநாதன் (வயது 20) கடற்படை மரைன் எஞ்ஜினியர் பயிற்சி பெறுவதற்காகப் பூனா சென்றுள்ளார். திரு. க. வேலுப்பிள்ளையின் மகனான இவர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, நெல்லியடிமத்தியமகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழையமாணவர் ஆவார்.

சந்நிதியில்

குறிப்பிட்ட இடங்களுக்குத் தடை

யாழ்ப்பாணம், செவ். தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் முருகன் வாசல், ஆறுமுகசுவாமி வாசல், பிள்ளையார் வாசல், வள்ளியம்மன்வாசல், நாகதம்பிரான் வாசல்களில் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு அருச்சகர்கள் பாவனைக்காக கட்டுப்பாடுவிதித்து தடைகள் போடப்பட்டுள்ளன. அந்த எல்லைக்கு அப்பால் உள்வீதிகள் யாவும் பொதுவாகவே இருக்கின்றன.

இளம்பிள்ளைவாத நோயின் காரணம்

உரும்பராய், திங்கள் ''இளம்பிள்ளைவாதநோய் வைரஸ் என்னும் கிருமிகளால் தொற்றிக்கொள்ளக்கூடிய நோயாகும். இதை எதிர்த்துப் போராடும் சக்தி குழந்தைகளுக்கு இல்லாத காரணத்தினாலேயே இந்நோய் இலகுவில் பீடித்துக்கொள்கிறது. மத்தியநரம்புத் தொகுதியை தாக்குவதால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் நிரந்தர பாரிசவாதக்காரர்களாக மாறிவிடுகிறார்கள்''

இவ்வாறு உரும்பராய் இளைஞர் விவசாயக்கழகத்தின் ஆதரவில் நடாத்தப்பட்ட சுகாதார திரைப்பட விழாவின்போது கலந்துகொண்டு உரையாற்றிய வடமாகாண சுகாதார போதனாசிரியர் திரு. கே. பாலசுப்பிரமணியம் கூறினார்.

திரு. ஐ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் இரண்டு மாதம் முதல் ஐந்து மாதம் வரையிலான குழந்தைகளே இந்நோயால் பாதிக்கப்படுவர் என்றும் அவர்களுக்கு தடுப்புமருந்து ஏற்றப் பெற்றோர்கள் முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இன்றைய பலன்

(20 - 8 - 68)

ஆவணி ௴ 4 ௳

செவ்வாய்க்கிழமை

திதி- துவாதசி.

நட்சத்திரம் திருவாதிரை பகல் 12-56 மேல் புனர்பூசம்.

ராகுகாலம் - 3-05 4-35.

சுபநேரம் 10-35— 12-05.

இன்று பிறந்தவர்களுக்கு- தனக்குறைவு, தானிய நஷ்டம், இளைப்பசை, இல்லச் சோர்வு, வணிகத்துறையில் வருவாய் மந்தம். பொறுமையும் ஊக்கமும் சமயங்களுக்கு நன்று. மாணவர்களாயின் சுகாதாரம் நன்று. கல்வி பயிலுவோர் தெண்டிப்பின் நன்று. உத்தியோகத்தர்களுக்கு மந்தநிலைக்குரிய ஆண்டாகும்.

மேஷம்- வரவில் உயர்வு வாழ்த்தும் உண்டு.

ரிஷபம்- பொருள் விரயம் பொல்லாங்கு கேட்டல்.

மிதுனம்- இன்னலின் பின்னல் இதயபாரம்.

கடகம்- திடீர் திருப்பம் திரவியலாபம்.

சிம்மம்- தூக்கம் கெடும் துன்பம் அணைக்கும்.

கன்னி- தாய்வழிச் சுகம், தனத்துடன் வாழ்வு.

துலாம்- இன்பம்பொங்கும், இனசன மகிழ்ச்சி.

விருச்சிகம்- மனமூட்டம் மதட்டத்தைத் தவிர்.

தனுசு- தாம்பத்தியம் சிறக்கும் தனமும் சேரும்.

மகரம்- செய்தொழில் தாமதம், சிந்தனைமிகுதி.

கும்பம்- தெய்வத்தின் துணை, தேன் சொட்டும் வாழ்வு.

மீனம்- பிறர் பொருள் வரவு, பெற்றோர் சுகம்.

சோதிடகலாநிதி திரு. வேலுப்பிள்ளை

பகிரங்க மன்னிப்பும் ரூபா 15 அபராதமும்

உடுப்பிட்டி, திங். சோலைவரியை வசூலிக்கச் சென்ற நெல்லியடி பட்டினசபை அதிகாரிகளின் கடமையை செய்யவிடாது தடுத்த ஒருவர் பகிரங்க மன்னிப்புக் கோரியதுடன் 15 ரூபா அபராதமும் செலுத்தினார்.

நெல்லியடி பட்டினசபைக்குக் கட்டவேண்டிய சோலைவரியைக் கட்டத் தவறியமையினால் தச்ச ஒழுங்கையைச் சேர்ந்த வீரகத்தி வேலாயுதம் என்பவரின்வீட்டில் உள்ள அசைவற்ற பொருட்களை நெல்லியடிப் பட்டினசபை வருமானமேற்பார்வையாளர் திரு. மு. கனகரத்தினம், நடுக்கட்டல் உத்தியோகத்தர் திரு. க. பொன்னையா ஆகியோர் நடுக்கட்ட முனையுகையில் வேலாயுதம் அவர்களது கடமைகளைச் செய்யவிடாது தடுத்தாராம்.

இதனை விசாரணை செய்த பருத்தித்துறை நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு ரூபா 15 அபராதம் விதித்ததோடு பகிரங்க மன்னிப்புக் கோருமாறும் உத்தரவிட்டார்.

தடுப்பு மருந்து

உரும்பராய், திங்கள் சுன்னாகம் வடக்கு சனசமூகநிலையத்தவர்களின் ஆதரவில் சுன்னாகம் சுகாதார மருத்துவ மாதுவின் தலைமையில் இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்து விநியோகம் செய்யப்பட்டது. 100க்கு அதிகமான பிள்ளைகளுக்கு மருந்து விநியோகம் செய்தனர்.

பலாலியில் கனிஷ்ட பல்கலைக்கழகம்

உடுப்பிட்டி, திங். பலாலியில் கனிஷ்ட பல்கலைக்கழகம் ஒக்டோபர் மாதம் ஆரம்பித்து வைக்கப்படும். தெகிவளை, காலி, கேகாலை. குளியாப்பிட்டியா ஆகிய பகுதிகளிலும் கனிஷ்ட பல்கலைக்கழகங்கள் இவ்வருடம் ஒக்டோபர் முதல் செயற்படும். பிரதான 5 கனிஷ்ட பல்கலைக்கழகங்களுக்கும் 5 அதிபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், விரிவுரையாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

விவசாய கைப்பணி விழா

யாழ்ப்பாணம், செவ். நாவற்காடு — கிராமமுன்னேற்றச்சங்கம், பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், பயிர்ச்செய்கைக்குழு, உணவுற்பத்திச்சபை ஆகியவற்றின் ஆதரவில் நடைபெறும் வரணி நாவற்காடு விவசாய கைப்பணிவிழா நாளை 21-ந் திகதி மாலை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்தால் ஆரம்பித்துவைக்கப்படவிருக்கின்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 20—8—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் அல் 61 மீற்றர் மாலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 திரைப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இன்னிசைமிகநிதிகள்.

344 மீற்றர் அல் 61 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் அல் 49 மீற்றர் மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 தமிழோசை பாடல், 6-30 விளையாட்டு விமர்சனம், 6-45 பாவனம், 7-00 இராமசஞ்சிகை, 7-30 முத்திநெறி — சைவசஞ்சிகை, 8-00 முன் விநிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 கதாப்பிரசங்கம் — ஆர். வடிவேலு.

நேர்தல் பற்றி ஆராயக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய் 'உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பற்றி ஆராயும் பொருட்டு இம்மாதம் 25-ந் திகதி கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் அலுவலகத்தில் மாவட்ட கூட்டம் நடைபெற இருக்கின்றது.

மேற்படி கூட்டத்தில் தேர்தல் பற்றி ஆராய்தல், மாவட்டசபையும் இன்றைய அரசியல் நிலையும், தொகுதித் தேவைகள், அரசாங்கக் காட்டுக்காணிகளைப் பகிர்ந்து செய்தல் பற்றியும் ஆராயப்படும். [ந. நி]

வாலுள்ள முட்டை

காங்கேசன்துறை, திங். மயிலிட்டியில் உள்ள ஒருவருடைய வீட்டில் கோழி ஒன்று அதிசய முட்டை ஒன்றை இட்டுள்ளது. மிகச் சிறியதான இம்முட்டை வோடு ஒரு வாலும் உள்ளது.

இலவச வெளியீடு

யாழ்ப்பாணம், செவ்வாய் நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழாவை முன்னிட்டு அளவையூர் சஞ்சிகை அருட்கவி சீ. வி. யினால் ஆக்கப் பெற்ற நல்லூர்க்கந்தன் பஜனைப் பாடல்கள் நாளை முதல் மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தாரால் நல்லூர் திவ்யஜீவன சங்கக் காரியாலயத்தில் வைத்து இலவசமாக வழங்கப்படும்.

தேவை

தினசரி 500 முதல் 1000 றாத்தல் வரை

மரவள்ளிக்கிழங்கு

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா

பகுதிகளிலிருந்தும் வாங்கலாம்

ஸ்ரீலங்கா ரப்பியோகா புரடக்ஸ்

தொடர்புகொள்ளுங்கள்:-

சுந்தரம் பிறதர்ஸ்,

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

நெல்லியடிப் பட்டினம்
கேள்வி விளம்பரம்

1968ம் ஆண்டு ஆவணி மாதம் 28ம் திகதி (28-8-68) முற்பகல் 10-30 மணிவரைக்கும் மேற்படி பட்டினவிசேஷ ஆணையாளரால், கீழ்க்காணும் வேலைகளுக்கு பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து "சீல்" வைத்த கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் கேள்விப் பிணைப் பணம் ரூபா 50/-ம், பத்திரப்பணம் ரூபா 5/-ம். செலுத்தியதின்பேரில் 27-8-68 பிற்பகல் 2-30 மணிவரை விசேஷ ஆணையாளரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரத்தில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ விசேஷ ஆணையாளருக்கு எச்சமயத்திலும் பூரண உரிமை உண்டு

ஏனைய விபரங்கள் யாவும் நெல்லியடிப் பட்டின விசேஷ ஆணையாளரின் அலுவலகத்தில் அலுவலகநேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

சு. முருகவேள்
விசேஷ ஆணையாளர்.

வேலைகளின் விபரம்

1. ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டிடம் திருத்தி அமைத்தல்.
2. வேரெண்டைச்சுடலை வீதி திருத்தி அமைத்தல் [வெள்ள அழிவு நிவாரணம்.]
3. ஆலங்கட்டை வீதிக்கு இரண்டாம்முறை தார் ஊற்றலும், பக்கங்களுக்கு மக்கி அணைத்தலும்.
4. பாணாத்தறை ஒழுங்கைக்கு இரண்டாம் முறை தார் ஊற்றல்
5. வேரெண்டைச் சுடலை வீதிக்கு இரண்டாம் முறை தார் ஊற்றல்.
6. கொல்ல வீதிக்கு இரண்டாம்முறை தார் ஊற்றல்.
7. இலகடி வீதிக்கு இரண்டாம்முறை தார்ஊற்றல்.
8. சரஸ்வதி வித்தியாலய வீதிக்கு இரண்டாம் முறை தார் ஊற்றல்.
9. வண்ணாத்துறை (கனுவில்) வீதிக்கு இரண்டாம் முறை தார் ஊற்றல்.
10. கன்பொல்லை வீதிக்கு இரண்டாம்முறை தார் ஊற்றல்.
11. கீரிப்பல்லி வீதிக்கு இரண்டாம்முறை தார்ஊற்றல்.

விசேஷ ஆணையாளர் அலுவலகம்,
நெல்லியடிப் பட்டினம்,
கரவெட்டி. 18-8-1968. 934

அறிவித்தல்
பல்லவராயன்கட்டு கிராமசபை
வேரவில் 17-8-68

பல்லவராயன்கட்டுகிராமசபையின் பரிபாலனத்திலுள்ள நாச்சிக்குடா, குமுமுனை ரோட்டமைப்பு வேலைக்கு 2ம் முறை ஒப்பந்தம் அழைக்கப்படுகிறது.

1. 31-8-68 திகதி பிற்பகல் 2 மணிவரைக்கும் சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.
2. கேள்விப் பிணைப் பணம்: ரூபா 25-00.
3. கேள்விப்பத்திரம் விலை: ரூபா 10-00

மேலும் இவ்வேலை சார்பான விபரங்கள் பல்லவராயன்கட்டுக்கிராமசபை அலுவலகத்திலும் உள்ளூராட்சி அமைச்சுயாழ்ப்பாண அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

சி. இரத்தினம்,
அக்கிராசனர்,
பல்லவராயன்கட்டுக் கிராமசபை,
17-8-68. வேரவில்.
935

கேள்வி விளம்பரம்
முள்ளிப்பற்று கிராமசபை

1. கொற்றாண்டார் குளம் ரோட்டு வேலை.
2. உணுவத்தை-வெற்றிலைக்கேணி ரோட்டு வேலை.

மேற்படி வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 31-8-1968ந் திகதி காலை 10 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். வேலைகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 5/- கேள்விப்பத்திரப் பணமாகவும், ரூபா 25/- கேள்விப் பிணையாகவும் கட்டி 28-8-1968 மாலை 4 மணிவரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரப் பணம் ரூபா 5/-ம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை முள்ளிப்பற்று கிராமசபை அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ந. கார்த்திகேசு
தலைவர்.
முள்ளிப்பற்றுகிராமசபை,
இயக்கச்சி.
1968-8-17. 936

நன்றி கூறல்

எமது புத்திரன் செல்வன் சச்சிதானந்தம் B. A. (Ceylon) (ஆசிரியர் மு. ம. வித்தியாலயம்) அவர்கட்கும் திரு. மு. கதிரவேற்பிள்ளை அவர்களின் புத்திரி செல்வி பங்கயச் செல்விக்கும் 17-8-68 சனிக்கிழமை நடந்தேறிய பதிவுத்திருமண வைபவத்தின் போது நேரில் சமுகமளித்தும் பரிசுகள் வழங்கியும் வாழ்த்துக்கள் அனுப்பியும் எங்மைக் கௌரவித்த உற்றார் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

வே. க. கந்தையாதம்பதிகள்.

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.
933

தீவுப்பகுதி

விளையாட்டுச் சங்க போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை, திங்கள்

தீவுப்பகுதி விளையாட்டுச் சங்கத்தின் முதலாவது ஆண்டு விளையாட்டுப் போட்டி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் இருபது சனசமூகநிலையங்களும் விளையாட்டுக்கழகங்களும் பங்குபற்றின, தீவுப்பகுதிக் காரியாதிகாரியும், தீவுப்பகுதி விளையாட்டுச் சங்கத் தலைவருமான திரு. எஸ். விநாயகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் திரு. பெஞ்சமின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் "மக்களிடையே உள்ள தீமையான பழக்கவழக்கங்கள் ஒழியவும், பொறாமை, தோல்வி மனப்பான்மை நீங்கவும், நல்ல பண்புகள் வளரவும், நோய்கள் அணுகாது உடலைப் பாதுகாப்பதற்கும் விளையாட்டுப் போட்டிகள் மிகவும் அவசியம்" என்று கூறினார்.

போட்டியில் வெற்றியீட்டிய கழக வீரர்களின் விபரம் வருமாறு:

பரிதிவட்டம் எறிதல்: ஏ. எவ். செபமாலை [ஐக்கிய விளையாட்டுக்கழகம்], ஏ. சோமாஸ்கந்தன் [காரைநகர் வி. க], ஏ. எவ். சேவியர் [ஐ. வி. க]. 1500 மீட்டர் ஓட்டம்: எஸ். சோமாஸ்கந்தராசா (புளியங்கூடல் மகாமாரி சனசமூகநிலையம்], எஸ். எஸ். சோதிராசா [காரந்தனை வி. க], ஜெயக்குமார் ஜேக்கப் [காரைநகர் வி. க]. 400 மீட்டர் ஓட்டம்: எஸ். சர்வேஸ்வரன் [றேஞ்சஸ் வி. க], எஸ். உலகநாதன் (மகாமாரி ச. ச. நிலையம்], எம். விக்கிரமசீலன் (ஐ. வி. கழகம்]. 100 மீற்றர் ஓட்டம்: ஜி. ஜோர்ஜ் [றேஞ்சர்ஸ் வி. க), எஸ். சிவகுருநாதன் (கரம்பன் வி. க], எஸ். சிவபாலன் (பருத்தியடைப்பு ச. ச. நிலையம்] 800 மீட்டர் ஓட்டம்: எஸ். சிவகுருநாதன் [கரம்பன் வி. க] எஸ். சிவபாலன் [பருத்தியடைப்பு ச. ச. நிலையம்], ஏ. குமாரசாமி [காரைநகர் வி. க]. நீளம்பாய்தல்: எஸ். சிவபாலன் [பருத்தியடைப்பு], தத்தி மிதத்துப் பாய்தல்: எஸ். சர்வேஸ்வரன் [றேஞ்சர்ஸ்], 800 மீட்டர் ஓட்டம்: எஸ். சோமாஸ்கந்தராசா [புளியங்கூடல் மகாமாரி ச. ச. நிலையம்], உயரம் பாய்தல்: சி. ஜெகநாதன் [நயினாதீவு], குண்டெறிதல்: ஏ. சோமாஸ்கந்தன் [காரைநகர் வி. க], 4X100 மீட்டர் அஞ்சல் ஓட்டம்

முதலாவது இடத்தை பெற்றுக்கொண்ட ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம், திரு. தம்பியப்பா சண்முகலிங்கம் வெற்றிக் கேடயத்தையும், இரண்டாவது இடத்தைப் பெற்ற ஊர்காவற்றுறை புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையம் இராமலிங்கம் ஸ்ரோர்ஸ் வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுக் கொண்டன.

தனிப்பட்ட சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்ட செ. சோமஸ்கந்தராசாவும், எஸ். சர்வேஸ்வரனும் கூட்டாக யொன்னம்பலம் அன் சன்ஸ் வெள்ளிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டனர்.

கயிறு இழுத்தல் போட்டியில் வெற்றி பெற்ற பாத்திமா சனசமூக நிலையம், எஸ். எம். அஞ்சல் வெள்ளிக்கிண்ணத்தையும் றேஞ்சல் ஒட்டப்போட்டியில் சாம்பியனாக வந்த புனைட்டெட் புளூஸ் ரி குமாரசாமி வெள்ளிக்கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டன.

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
Audrey Hepburn &
Peter O'Toole
in
HOW TO STEAL
A MILLION

வின்ஸர்
தினசரி 3 காட்சிகள்
ராஜேந்திரன் விஜயகுமாரி
நடித்த
சாரதா

2-வது வாரம்
மனோகரா
[யாழ்ப்பாணம்]
தினசரி
2-30, 6-30, 9-30 மணி
ஜெய்சங்கர் - விஜயலட்சுமி
கே. பி. சுந்தராம்பாள்
நடித்த
உயிர்மேல் ஆசை

55-வது தினம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா

வரி விளம்பரம்

தேவை

நன்கு பயிற்சி பெற்ற பெண் நெசவாளர் உடன் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். ஹலன்ட் நெசவு நிலையம் கோப்பாய் தெற்கு, கோப்பாய். 28

வாடகைக்கு

சங்கானை-சித்தங்கேணி பிரதான வீதியிலுள்ள பழைய மதுபானகந்தோராக இருந்த பெரிய வீடும், அதன் மேற்கேயுள்ள ஒரு சிறிய வீடும் வாடகைக்கு விடப்படும். தேவையானோர் திருமதி அ. செல்லம்மா, கனகசபை, பிள்ளையார் கோவிலடி, சித்தங்கேணி அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். 26

காந்திஜி விழா
உடுவில், திங்கள்
காந்திஜி 100-வது ஆண்டு விழா கன்னாகம் பட்டின சபை ஆதரவில் நூல்நிலைய மைதானத்தில் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

மாளிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
கல்யாண பரிசு
[புத்தம் புதிய கொப்பி]

ராஜா
[யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30, 9-45
A. V. M. ராஜன்
புஸ்பலதா-சோ
திறம்பட நடித்த
கற்பூரம்
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்
வெளியீடு

விளாஸா (கொழும்பு) மைலன் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)

ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
மனோரமா
நாகேஷ்
முத்துராமன்
நடித்த

ஸ்ரீ விநாயகா
பிக்சர்ஸ்
நான்

கெபிட்டல்
(கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த
சங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐ. ஆர். சி.க்கள் 827 பேர் வடபகுதியில் இருக்கிறார்கள்

தலைமறைவில் 304 பேர்; 119 பேர் சிறைப் பறவைகள்

—நமது காரியாலய நிருபர் எஸ். திருச்செல்வம்—

யாழ்ப்பாணம், செவ். வடபகுதியில் மட்டும் 827 ஐ. ஆர். சி.க்கள் இருக்கிறார்கள். இவர்களில் மொத்தம் 119 ஐ. ஆர். சி.க்கள் இப்போது சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார்கள். 304 ஐ. ஆர். சிக்கள் தலைமறைவாக இருந்து வருகின்றனராம். மிகுதி 406 ஐ. ஆர். சி.க்கள் மாதா மாதம் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்படுகிறார்கள்.

இவ்விபரங்கள் பொலிஸ் புள்ளி விபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் நான்கு உதவி பொலிஸ் அதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும் 16 பொலிஸ் நிலையங்களிலுமே மொத்தம் 827 ஐ. ஆர். சி.க்கள் இருப்பதாக பொலிஸாரால் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களில் 406 பேர் தலைமறைவாக இருக்கின்றபோதும் 827 ஐ. ஆர். சி.க்களினதும் புகைப்படங்களும், சகல விபரங்களும் எல்லா பொலிஸ் நிலையங்களிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

குற்றத்தடுப்பை முற்றாக ஒழிக்க ஐ. ஆர். சி.க்கள் பட்டியலுடன், குற்றத்தடுப்பு இயக்கங்களில் ஈடுபடும் சில வாலிபர்களது பெயர்களைக்கொண்ட பட்டியல் ஒன்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் உத்தரவுக்கிணங்க சகல பொலிஸ் நிலையங்களிலும் தற்போது சேகரிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் சுப்பிரிண்டன் நேற்றுத் தெரிவித்தார்.

காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் பகுதியிலேயே மிகக் கூடுதலான தொகையாக 255 ஐ. ஆர். சி.க்கள் இருக்கிறார்களாம். இரண்டாவதாக யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் பகுதியில் 243 ஐ. ஆர். சி.க்களும், மூன்றாவதாக மன்னார் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் பகுதியில் 168 ஐ. ஆர். சி.க்களும், நான்காவதாக கிளிநொச்சி உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் பகுதியில் 161 ஐ. ஆர். சி.க்களும் இருப்பதாக பொலிஸார் கணக்கிட்டுள்ளனர்.

ஒவ்வொரு பொலிஸ்நிலையப் பகுதியிலுமுள்ள ஐ. ஆர். சி.க்கள் பற்றிய விபரம் பின்வருமாறு:

யாழ்ப்பாணம்: மொத்தம் 148 பேர். 27 பேர் சிறைத் தண்டனை. 78 பேர் தலைமறைவு.

ஆனைக்கோட்டை: மொத்தம் 26 பேர். ஒருவர் சிறைத் தண்டனை. 8 பேர் தலைமறைவு.

கோப்பாய்: மொத்தம் 33 பேர். 2 பேர் சிறைத் தண்டனை. 11 பேர் தலைமறைவு.

ஊர்காவற்றுறை: மொத்தம் 34பேர். 3 பேர் சிறைத் தண்டனை. 7 பேர் தலைமறைவு.

சுன்னாகம்: மொத்தம் 43 பேர். 10 பேர் சிறைத்தண்டனை. 15 பேர் தலைமறைவு.

காங்கேசன்துறை: மொத்தம் 62 பேர். 10 பேர் சிறைத் தண்டனை. 20 பேர் தலைமறைவு.

பருத்தித்துறை: மொத்தம் 56 பேர். 5பேர் சிறைத் தண்டனை. 18 பேர் தலைமறைவு.

வல்வெட்டித்துறை: மொத்தம் 30 பேர். 3 பேர் சிறைத் தண்டனை. 15 பேர் தலைமறைவு.

கள்ளூகம்: மொத்தம் 64 பேர். 8 பேர் சிறைத் தண்டனை. 15 பேர் தலைமறைவு

கன்னாகம்: மொத்தம் 64 பேர். 8 பேர் சிறைத் தண்டனை. 15 பேர் தலைமறைவு

சாவகச்சேரி: மொத்தம் 63 பேர். 7 பேர் சிறைத் தண்டனை. 17 பேர் தலைமறைவு.

கிளிநொச்சி: மொத்தம் 53 பேர். 7 பேர் சிறைத் தண்டனை. 32 பேர் தலைமறைவு.

முல்லைத்தீவு: மொத்தம் 37 பேர். 6 பேர் சிறைத் தண்டனை. 20 பேர் தலைமறைவு.

பளை: மொத்தம் 8 பேர். ஒருவர் சிறைத் தண்டனை. ஒருவர் தலைமறைவு.

வவுனியா: மொத்தம் 105 பேர். 20 பேர் சிறைத் தண்டனை. 25 பேர் தலைமறைவு.

மன்னார்: மொத்தம் 61. 9 பேர் சிறைத் தண்டனை. 32 பேர் தலைமறைவு.

தலைமன்னார்: மொத்தம் இருவர் மட்டுமே.

பதிவுசெய்யப்பட்ட 827 ஐ. ஆர். சி.க்களும் கூடுதலாகக் களவுகளிலேயே ஈடுபடுவதாகவும் பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கா. நி]

யாழ்ப்பாணம்
ஐக்கிய வியாபாரச் சங்க
பொன்விழாவை முன்னிட்டு
ஈழநாடு ஸ்தாபனத்தார் அளிக்கும்
'கலை விழா'
30—8—1968
யாழ்ப்பாணநகரில் நடைபெறும்
விபரங்கள் விரைவில் வெளிவரும்

நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செவ். கவிஞர் மூ. க. சூரியனூல் எழுதப்பட்ட "நல்லைக் கந்தன் பாமாலை" நூல்வெளியீட்டு விழா இன்று மாலை இரண்டுமணிக்கு நல்லூர் ஸ்ரீ முருகன் தண்ணீர் பந்தலில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இவ் வைபவத்தில் திரு. எம். ஸ்ரீகாந்தா, மூ. சுவரமுத்து, உ. சோமசேகரம் ஆகியோர் உட்பட பலர் சொற்பொழிவாற்றுவார்கள். கவிஞர் சூரியனுக்குஇவ் வைபவத்தில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவிருக்கின்றது. (கா. நி)

இன்று

யாழ்ப்பாணம், செவ். நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவை யொட்டு போடப்பட்ட தட்டாதெரு கலாஜோதி சனசமூக நிலையத்தினரின் தண்ணீர்ப்பந்தலின் பொறுப்பாளர்கள் இன்று மாலை சமய அறிவுப் போட்டியொன்றை நடத்துகிறார்கள். உதவி அரசாங்க அதிபர் திரு. கி. முருகேசம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணக் கனிஷ்ட தொழில் நுட்ப நிலையத்தின் 9ம் ஆண்டு நிறைவு விழா இன்று மாலை கல்லூரி அதிபர் திரு. கே. நாகலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. திருவாளர்கள் க. குணராஜா, சே. வன்னியசிங்கம் ஆகியோரின் சொற்பொழிவுகளும், மெல்லிசை, கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும் [கா. நி]

இலக்கியச் சந்திப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ். இலக்கிய நண்பர் கழக ஆதரவில் இன்று மாலை 3 மணிக்கு மல்லாகம் விவேகானந்தா கல்லூரியில் ஓர் இலக்கிய சந்திப்பு இடம்பெறும்.

மரண அறிவித்தல்

ரெட்டணம் - ஊர்காவற்றுறை கிழக்கைச் சேர்ந்த காளஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் மனைவியும் அந்தோனிப்பார்கோவில்மூப்பர் காலஞ்சென்ற திமிங்குமுத்துவின் மகளும், சூசன் எஸ். ஏ. ஜேம்ஸ், ராஜமாணிக்கம் ஆகியோரின் தாயாருமாகிய செபமாலைமரியை ரெட்டணம் இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் செவ்வாய்க்கிழமை (இன்று) மாலை 4-30 மணியளவில் [illegible] நல்லடக்கம் செய்யப்படும். 29

ஆலோசனை கூட்டங்கள்

யாழ்ப்பாணம், செவ். தற்கால அரசியல் நிலைமை பற்றியும் தனித்தமிழ்நாடு கோரிக்கைபற்றியும் தொகுதிகள் தோறும் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்த தமிழர் சுயாட்சிக் கட்சியினர் தீர்மானித்துள்ளனர்.

வாலிபர்களைக் கொண்ட இந்த ஆலோசனைக் கூட்டங்களில் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார்.

தமிழர் சுயாட்சிக் கட்சி நிறுவுவதற்கு முன்னோடியாக நடைபெறும் இந்த ஆலோசனைக் கூட்டங்களில் வாலிபர்களின் ஆதரவு திரட்டப்படுமெனத் தெரிய வருகிறது.

முதலாவது ஆலோசனைக் கூட்டம் இன்று வல்வெட்டித்துறையில் நடைபெறும். இதைத் தொடர்ந்து காரைநகர், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நல்லூர், அனலைதீவு ஆகிய இடங்களிலும் ஆலோசனைக்கூட்டங்கள் நடைபெறவிருப்பதாகத் தெரியவருகிறது.

தமிழரசு வா. மு. நிர்வாகிகள்

அச்சுவேலி, திங்கள் ஆவரங்கால் மேற்கு தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணியின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ச. பூபாலன், உபதலைவர்: திரு. க. செல்லத்துரை, இணைக் காரியதரிசிகள்: திருவாளர்கள் க. நிரவியம், வே. கந்தசாமி, தனாதிகாரி: திரு. ஆ. கிருஷ்ணனந்தன், உபதனாதிகாரி: திரு. சி. பாலசிங்கம். பின் வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள் பு. நாகமுத்து, வே. செல்லத்துரை, மு. சிவநாதன், இ. சிவக்கொழுந்து, இ. யோகராசா, வ. அனுபுத்திரன், முவைரமுத்து, வ. மயிலு, சி. லட்சுமிகாந்தன், செ. தங்கராசா.

தமிழ் இசை விழா

யாழ்ப்பாணம், செவ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தாரின் ஒன்பதாம் தமிழிசை விழாவும், குழந்தைகள் கதம்ப விழாவும் அடுத்த மாதம் 6-ம் திகதியிலிருந்து 11-ம் திகதிவரை நல்லூரில் நடைபெறவிருக்கின்றது.

முதல் நான்கு நாள் விழாவிலும் இன்னிசைக் கச்சேரிகளும், கடைசி இரு நாட்களும் குழந்தைகள் அளிக்கும் இசை, நடன, வாத்திய நிகழ்ச்சிகளும் நடைபெறுமென மன்றச் செயலாளர் திரு. ஆ. நமசிவாயம் அறிவித்துள்ளார். விழாவில் தகுதி பெற்ற சில மாணவர்களுக்கு 'இன்னிசைச் செல்வம்' என்ற பட்டமும் வழங்கப்படவிருக்கின்றது. [கா. நி.]

நாடும் நடப்பும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டு நிகழ்ச்சி அளித்தனர். திரு. கணபதிப்பிள்ளையின் நகைச்சுவையுடன்நல்ல தொகுப்புரைத்தை நல்ல முறையில் அளித்த அந்தப் பந்தலுக்குப் பொறுப்பான இளைஞர்களைப் பாராட்ட வேண்டும். சினிமாப்பாடல்களை ஒலிபரப்பியில் கதற விடுவதைவிட கந்தன் கருணை ஒலிபரப்பியதுநல்ல தொண்டு.

— ஊர்சுற்றி.

தீர்த்தோற்சவம்

சுழிபுரம், திங்கள் பொன்னாலை வரதராஜப் பெருமான்கோவில் தீர்த்தத் திருவிழா திருவடிநிலை தீர்த்தக்கரையில் நடைபெற்றது மஞ்சத்தில் சுவாமியை வைத்து நாலு காளை மாடுகளால் இழுக்கப்பட்டு மஞ்சம் திருவடிநிலையை அடைந்தது.

உற்சவம்

யாழ்ப்பாணம், செவ்வாய் கந்தர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 27-ந் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். 6-ந் திகதி நடைபெறும் சங்காபிஷேகத்துடன் திருவிழா முடிவுறும்.

திருவிழாக் காலங்களில் மாலை 6 மணி முதல் சுவாமி நாதத்தம்பிரான் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். [த. நி.]

தந்திச் சேவை

உடுப்பிட்டி, திங்கள் நாகர் கோவில், குடாரப்பு வாசிகள், நேரடித் தந்திச்சேவைத் தொடர்பு வசதியைப் பெற்றுள்ளனர். இதுவரை காலமும் குடத்தனையிலிருந்தே நாகர் கோவில், குடாரப்பு ஆகிய பகுதிகளில் தந்திகள் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. கடந்த 16-ந் திகதி முதல் நாகர்கோவில் உபதபால் கந்தோரிலிருந்தே தந்திகள் பட்டுவாடா செய்வதை ஆரம்பித்துள்ளனர்.

தந்திக்கம்பி அறுக்கப்பட்டது

சுழிபுரம், திங்கள் பொன்னாலைச்சந்தியிலிருந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையேயுள்ள தந்திக்கம்பிகள் வெட்டப்பட்டு சேதம் செய்யப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் நடைபெற்றதாக அறியப்படும் இச்சம்பவம் சம்பந்தமாக சுளிபுரம் பொலிசார் புலன்விசாரணை செய்கின்றனர். அறுந்த கம்பிகள் எடுத்துச் செல்லப்படவில்லையெனத் தெரிகிறது.

எதிரி விடுதலை

குரும்பசிட்டி, திங்கள் இவ்வாண்டு பங்குனி மாதம்5ந்திகதி சுகிர்தராணி அருணாசலம் [23வயது] என்ற இளம்பெண்ணுக்கு கத்தியால் வெட்டிக் காயம் விளைவித்ததாக வசாவிளானைச் சேர்ந்த கே. இராசம்மா என்ற பெண்மீது காங்கேசன்துறைப் பொலிசாரால் தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது சாட்சியம் முரண்பாடாகக்காணப்பட்டதால் எதிரியை விடுதலை செய்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

பஸ்ஸை நிறுத்தாமல் போகிறார்களாம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு பருத்தித்துறை பஸ் டிப்போவைச் சேர்ந்த பஸ்சாரதிகள் சிலர் வல்வெட்டித்துறையிலுள்ள பஸ்தரிப்பு நிலையம் ஒன்றில் பஸ்ஸை நிறுத்தாது போவதாகவும் இதனால் பிரயாணிகள் பலர் புகார் தெரிவிப்பதாகவும் தெரியவருகின்றது. குறிப்பிட்ட பஸ்தரிப்பு நிலையத்தில் பஸ்கள் நிறுத்தப்பட வேண்டுமென பிராந்திய முகாமையாளர் கட்டளை பிறப்பித்திருந்தும் சில சாரதிகள் அதற்கமைய அசட்டை செய்து வருகின்றனராம்.

இவ்வத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org